**நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸினஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸினஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட்டின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பிஈடி/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல் சுற்றறிக்கையின் | நஷனல் ஸ்கூல் ஒவ் பிசினஸ் மனேஜ்மென்ட் தயாரித்த நிதி மற்றும் செயற்பாட்டு கையேட்டிற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில் | NSBM தற்போது நிர்வாகக் கட்டமைப்பின் முன்மொழியப்பட்ட மேம்படுத்தலின் தாக்கங்களுக்கு ஏற்ப நிறுவனத்தின் செயற்பாட்டுக் கையேடுகளை மேம்படுத்தும் செயன்முறையில் உள்ளது. தேவையான | குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிச் செயற்பாடுகள் கையேட்டிற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2.2.5 ஆம் பிரிவு மற்றும் 2.3 ஆம் பிரிவு, அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 7.7 ஆம் பிரிவு மற்றும் 2023 செப்தெம்பர் 27 ஆம் திகதிய பிஈடி/01/2021 (ii) மற்றும் பிஈடி/01/2021 (iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | லை. | அங்கீகாரங்கள் ஏதேனும் இருந்தால் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (i) | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கான செயற்பாட்டு கையேட்டின் 3.2v ஆம் பந்தி | ஊக்குவிப்புத் திட்டங்கள் அரச வணிகப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் மாத்திரமே செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2024 பெப்ரவரி 12 வரை நஷனல் ஸ்கூல் ஒவ் பிசினஸ் மனேஜ்மென்ட் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | அமைப்பு அகவிதியின் பிரகாரம் கம்பனியின் வணிக முகாமைத்துவம் மற்றும் விவகாரங்களை முகாமை செய்வதற்கும் வழிநடாத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் தேவையான அனைத்து அதிகாரங்களையும் சபை கொண்டிருக்கும். ஊக்குவிப்புகளுக்கு தேவையான அனைத்து அங்கீகாரங்களும் பணிப்பாளர் சபையிடமிருந்து பெறப்பட்டுள்ளன. | பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் ஊக்குவிப்புத் திட்டத்திற்கு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ii) | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கான செயற்பாட்டு கையேட்டின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | பாடசாலையில் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட பதவியணியினர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2024 மார்ச் 31 வரை பெறப்பட்டிருக்கவில்லை. | | குறிப்பிட்ட பதவியணியினர் மற்றும் பதவியணியினர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2023.03.29 ஆம் திகதிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | முற்பண தனிநபர் வருமான வரியை (APIT) கணிப்பிடும் போது, நஷனல் | குறித்த வாகனங்கள் உத்தியோகபூர்வ பயண நோக்கங்களுக்காக | சுற்றறிக்கைகளின் பிரகாரம் APIT கணிப்பிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாயகத்தின் எஸ்ஈசீ/2023/ஈ/01 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2023.04.06 ஆம் திகதிய எஸ்ஈசீ/2023/ஈ/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஸ்கூல் ஒவ் பிசினஸ் வழங்கிய விடுதிகள், வாகனங்கள் மற்றும் எரிபொருள் போன்ற நிதி அல்லாத நலன்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன, மேலும் பதவியணி உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதில்லை. இலவச தங்குமிடம் மற்றும் மாதாந்த வாடகை, மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் மற்றும் தொலைக்காட்சி இணைப்புக் கட்டணங்கள் ஒவ்வொரு ஊழியரின் மாதச் சம்பளத்தில் கழிக்கப்படுகின்றன. | |
| (இ) | நஷனல் ஸ்கூல் ஒவ் பிசினஸ் மனேஜ்மென்ட்டின் கட்டம் II செயற்திட்டத்தின் அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் செயற்திட்ட அறிக்கை, முதலீட்டுத் திட்டம் மற்றும் சாத்தியவள ஆய்வு அறிக்கை கருத்தில் கொள்ளப்பட்டது. | நஷனல் ஸ்கூல் ஒவ் பிசினஸ் மனேஜ்மென்ட்டின் கட்டம் II செயற்திட்டத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கற்கைநெறிக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு உட்படுகிறது. எனினும், நஷனல் ஸ்கூல் ஒவ் பிசினஸ் மனேஜ்மென்ட் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 12 பாடநெறிகளுக்கான கற்கைநெறிக் கட்டணத்தை ஒரு முறையும் 17 கற்கைநெறிகளுக்காக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இரண்டு முறையும் 17 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. | (i) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில் 2020 யூலை மாதத்தில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவு இருந்த போதிலும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக எடுகோள்கள் மிகவும் மாற்றப்பட்டன. கடந்த சில ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடியும் அரசியல் மாற்றங்களும் நிகழ்ந்தன. | கற்கைநெறிக் கட்டணத்தை அதிகரிக்கும் போது உண்மையான கற்கைநெறி செலவு மற்றும் சமூக நீதி ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2021 பெப்ரவரி 18 இல் திருத்தப்பட்ட நஷனல் ஸ்கூல் ஒவ் பிசினஸ் மனேஜ்மென்ட்டின் | மீளாய்வாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வருடாந்த பௌதீக | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு | தொடர்புடைய நிதிப்பிரமாணங்களுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதி மற்றும் கணக்கீட்டு செயற்பாடுகள் கையேட்டின் 6.4 ஆம் பிரிவு | மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மற்றும் அதன் பின்னர் சேர்த்தல் 2023 ஆம் ஆண்டில் கைமுறையாக மேற்கொள்ளப்பட்டது. NSBM நிலையான சொத்துகள் தொகுதியை 2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்ததுடன் ஏற்கனவே நேரடி சூழலில் உள்ளது. அடுத்த 04 மாதங்களுக்குள் பணியை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கிறது. | |
| (உ) | நிதி மற்றும் கணக்கீட்டு செயற்பாடுகள் கையேட்டின் 4.5.1 ஆம் பிரிவு | 6 மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 1,511,930 கூட்டுமொத்தமான 54 காசோலைகள் தொடர்பாக கையேட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக நிலுவையாக உள்ள தீர்க்கப்படாத உருப்படிகள் விசாரிக்கப்பட்டு 1 வருடத்திற்குப் பின்னர் நீண்டகாலம் நிலுவையாக உள்ள பொதுப் பேரேட்டு கணக்கிலிருந்து திரும்பப் பெறப்படும். 1 வருட காலத்திற்குப் பின்னர் காலாவதியான அனைத்து காசோலைகளும் பொதுப் பேரேட்டில் சீர்செய்யப்பட்டுள்ளன. | தொடர்புடைய பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 720,432,349 இலாபமொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 190,744,927 ஆக இருந்தது. ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 529,687,422 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ரூபா 1,275,288,932 ஆல் நிகழ்ச்சித்திட்ட கட்டண வருமானம் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விளையாட்டு மைதானத்தில் புல்தரை அமைப்பதற்கும், உயரத்திலுள்ள தெளிப்பான் (Pop-up Sprinkler) நீர்ப்பாசன முறைமையை நிறுவுவதற்கும், நிலத்தடி வடிகால் முறைமையை நிறுவுவதற்கும் கேள்வி கோருவதற்காக CIDA தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ”SP-3 மற்றும் அதற்கு மேல்” கேள்விதாரர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் கேள்விதாரர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் நிர்மாணத் துறையில் நிலவும் சூழ்நிலை காரணமாக, இந்த செய்தித்தாள் விளம்பரத்திற்கு பதிலளிக்கும் விதமாக இரண்டு கேள்விகளை மாத்திரமே நாங்கள் பெற்றோம். விண்ணப்பித்த கேள்விதாரர்கள் இருவரும் சமீப காலங்களில் இதேபோன்ற செயற்திட்டங்களை பூர்த்தி செய்து மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. | தொடர்புடைய பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நஷனல் ஸ்கூல் ஒவ் பிசினஸ் மனேஜ்மென்ட்டால் அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெறுகைக் கையேடு பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | NSBM இன் அமைப்பு அகவிதியின் பிரகாரம் கம்பனியின் வணிகம் மற்றும் விவகாரங்கள் பணிப்பாளர் சபையின் வழிகாட்டல் அல்லது மேற்பார்வையின் கீழ் முகாமை செய்யப்படும். அனைத்து பெறுகைகளும் நிதி கையேட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | அரசாங்க சுற்றறிக்கைகளுடன் இணங்குதல் வேண்டும். |